உண்மை நகல்

# தமிழ்நாடு அரசு

## சுருக்கம்

நத்தம் – நிலவரித்திட்டம் – நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் மாவட்ட வருவாய் அதிகாரி பிறப்பிக்கும் ஆணையை திருத்தியமைப்பதற்கு துறைத்தலைவர் நில நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் வழங்குதல் – ஆணையிடப்படுகிறது.

---

## வருவாய் நி.அ.2(1) துறை

அரசாணை (நிலை) எண்.396 நாள் 18.09.2003.

**மீண்டும் படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.1971, வருவாய் (எஸ்.எஸ்.2) துறை, நாள் 14.10.1988.
2. அரசாணை (நிலை) எண்.454, வருவாய்த் துறை, நாள் 13.05.96.
3. அரசாணை (நிலை) எண்.693, வருவாய்த் துறை, நாள் 24.07.97.

**படிக்கவும்:**

4. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை –5 கடித எண்.தெ1/47947/97, நாள் 27.02.1998, 10.11.1998 மற்றும் 09.10.1999.

*******

**ஆணை:**

பார்வை 1–இல் படிக்கப்பட்ட ஆணையில் நத்தம் நிலவரித்திட்டம் அமுலாக்கும் சமயத்தில் நத்தம் வட்டாட்சியர் பிறப்பிற்கும் உத்தரவை எதிர்த்து உதவி நிலவரித்திட்ட அலுவலருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம் என ஆணையிடப்பட்டது. பார்வை 3–இல் படிக்கப்பட்ட அரசாணையில், உதவி நிலவரித்திட்ட அலுவலரின் அதிகாரம் சம்பந்தப்பட்ட கோட்டாட்சியருக்கு மாற்றப்பட்டது. அந்த மேல்முறையீட்டை எதிர்த்து சம்பந்தப்பட்ட மாவட்ட வருவாய் அலுவலருக்கு ஒரு சீராய்வு மனு தாக்கல் செய்து கொள்ளலாம். ஆனால், நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணையில் தவறு கண்ட இடத்தில் ஆணைகளை திருத்தியமைப்பதற்கு விதிமுறைகளில் துறைத்தலைவரான நில நிர்வாக ஆணையர் மற்றும் அரசிற்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. எனவே, அரசாணை நிலை எண்.1971 வருவாய்த் துறை, நாள் 14.10.88–இல் இதற்கு வகை செய்யும் முகமாக, அந்த ஆணையில் பத்தி 7–க்கு சேர்க்கையொன்றை வெளியிடலாம் என பார்வை 4–இல் காணும் தனது கடிதத்தில் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

2. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பை அரசு நன்கு ஆய்வு செய்தது, அவரது செயற்குறிப்பை ஏற்று, துறைத்தலைவரான நில நிர்வாக ஆணையருக்கு கொடுக்கப்படும் மனுக்களை பரிசீலித்து, மாவட்ட வருவாய் அலுவலர்கள் பிறப்பித்த ஆணைகளில் தவறு இருப்பின், அதை சுட்டிக்காட்டி திருத்துவதற்கும் மாற்றி அமைப்பதற்கும், அதுபோல் மற்றைய மனுக்களையும் தேவையானால் தன்னிச்சையாக ஏற்று திருத்துவதற்கும், மாற்றியமைப்பதற்கும் அதிகாரம் வழங்கி. இதைச் செயற்படுத்த, இந்த அரசாணையுடன் சேர்க்கப்பட்டுள்ள அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட அரசு ஆணையிடுகிறது.

3. வெளியிடப்பட்ட அறிக்கையில், 196 நகல்களை வருவாய்த் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9–க்கு அனுப்பி வைக்கும்படி தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர் கோரப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.சுந்தர தேவன்
அரசு செயலாளர்.

பெறுநர்:

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை –5.
முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை –5.
சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர், சென்னை –5.
ஆணையர் மற்றும் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5.
எழுதுபொருள் அச்சுத்துறை இயக்குநர், சென்னை –2.
பணி மேலாளர், தமிழ்நாடு மத்திய அச்சகர், சென்னை –70.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
சிறப்பு அலுவலர், தஞ்சாவூர்
உதவி நிலவரித்திட்ட அலுவலர்கள் ( திருவண்ணாமலை, மதுரை, தஞ்சாவூர் மற்றும் தருமபுரி)
சுத்தநகல் கோப்பிற்கு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

//உண்மை நகல்//

3/1/2023
பிரிவு அலுவலர்.
3/1/23